குறுவை அறுவடை.

*380 வின—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ் கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அண்மையில் 20–10–77 முதல் பெய்த கடும் மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் குறுவை அறுவடை பாதிக்கப் பட்டதா?

(ஆ) இதன் விளைவாக ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அண்மையில் 20-10-77 முதல் பெய்த கடும் மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் 1,21,773 ஏக்கர் பரப்பளவு குறுவை அறுவடை பாதிக்கப் பட்டுள்ளது.

(ஆ) ஒரு இலட்சம் மெட்ரிக் டன் குறுவை நெல் சேத மடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : புயலுக்குப் பின்னால் அறுவடை யான நிலங்களிலெல்லாம் 25 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு வரைதான் அறுவடை செய்யப்பட்டது. அது அரசின் கணக்கில் சரியாக வராததின் காரணமாக அந்த விவசாயிகளுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்பட வில்லை, என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இந்த விஷயம் குறித்து நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் கூட இந்த அவையில் அறிவித்திருக்கிறார்கள். வெள்ளம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, எங்கெங்கு 25 சதவீதத்திற்குக் குறைவாக விளைச்சல் உண்டோ அந்தப் பகுதிகளுக் கெல்லாம் தண்ணீர் வரி, நிலவரி போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. முனிசாமி: மழை காரணமாக ஏரிகளில் எல்லாம் ஆழம் கம்மியாகிவிட்டதால் அவற்றில் தூர் வார அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபொதுப் பணித் துறையினரால் செய்யப்பட வேண்டிய வேலை. இருந்தாலும் இந்த அரசு அதை கவனத்தில் கொள்ளும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : சபை முன்னவர் நேற்றைய தினம் அறிவிக்கும் போது 36 காசும் அதற்குக் கீழும் என்று அறிவித்தார்கள். இப்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 25 காசு என்று சொல்கிறார்கள். ஆகவே இதுபற்றி நிதியமைச்சர் விளக்கம் அளிப்பார்களா?

1978 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னவர் அவர்கள் தமிழகம் முழுவதும் பற்றிச் சொல்லியிருப்பார், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டம் பற்றி மட்டும் சொல்லியிருக்கலாம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தமிழ்நாட்டிற்குள்ளேதானே தஞ்சை மாவட்டமும் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் 25 சதவிகிதத்திற்குக் குறைவாக விளைச்சல் உள்ள பகுதிகளுக்கு நிலவரி, தண்ணீர் வரி போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினக்கள்.

பூச்சிக் கொல்லி மருந்து கொள்முதல்.

276 வின—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சிக் கொல்லி மருந்துகள் 1970-ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது ?

(ஆ) இப்போது எவ்வளவு ஸ்டாக் உள்ளது ?

(இ) இதில் எவ்வளவு காலம் கடந்தவை ?

விடை : (அ) கொள்முதல் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளின் அளவு :

1970—71	பொடி	34,874.4மெ. டன்கள்
	திரவம்	8,20,306 லிட்டர்கள்
1971—72	பொடி	40,903 மெ. டன்கள்
	திரவம்	12,86,034 லிட்டர்கள்
1972—73	பொடி	24,257 மெ. டன்கள்
	திரவம்	9,32,831 லிட்டர்கள்
1973—74	பொடி	13,566 மெ. டன்கள்
	திரவம்	5,84,512 லிட்டர்கள்
1974-75	பொடி	13,210.7 மெ. டன்கள்
	திரவம்	6,88,684 லிட்டர்கள்